**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**தேதி 16.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டின் நேர்மையான முன்னேற்றங்களை முன்னிலைப்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிக்கையாளர் தினத்தை ஒட்டி, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பீகாரில் புதிய அரசு அமைப்பதற்கான பணியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

வதந்திகளை நம்பாமல், அரசு அளிக்கும் செய்திகளை மட்டுமே பின்பற்றுமாறு புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் (13)

இளைஞர்களிடையே நம்பிக்கையை தூண்டும் வகையில் நாட்டின் நேர்மையான முன்னேற்றங்களை முன்னிலைப்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மனோரமா-நியூஸ் மேக்கர் விருதுகள் 2024 விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், குரலற்றவர்களுக்கு குரல் கொடுக்க பத்திரிக்கை உதவுகிறது என்றும், விழிப்புணர்வை பரப்புவதன் மூலம் போதை பொருள் இல்லா சமூகத்தை உருவாக்குவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் கூறினார். இந்நிகழ்ச்சியில், மத்திய சுற்றுலா மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபிக்கு மனோரமா நியூஸ் மேக்கர் விருதை திரு சி பி ராதாகிருஷ்ணன் வழங்கினார். சினிமா மற்றும் அரசியல் ஆகிய இரு துறைகளிலும் நிலைத்து வெற்றி பெற்றதற்காக திரு கோபியை அவர் பாராட்டினார்.

*பத்திரிக்கையாளர் தினம் 1 (11)*

சுதந்திரமான மற்றும் பொறுப்பான பத்திரிக்கையின் பங்களிப்பை கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 ஆம் தேதி தேசிய பத்திரிக்கையாளர் தினம் கொண்டாடப்படுகிறது. 1966 ஆம் ஆண்டு இந்திய பத்திரிக்கை கவுன்சில் நிறுவப்பட்டதை நினைவு கூறும் இந்த நாள், பத்திரிக்கையின் உயர் தரத்தை நிலை நிறுத்தவும், வெளிப்புற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல்களில் இருந்து பத்திரிக்கைகளை பாதுகாக்கவும் உறுதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கருப்பொருள் **அதிகரித்து வரும் தவறான தகவல்களுக்கு மத்தியில் பத்திரிக்கை, நம்பகத்தன்மையை காப்பதில் கவனம் செலுத்துகிறது** என்பதாகும். இந்த நாளை ஒட்டி தலைவர்கள் பத்திரிக்கையாளர்களுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு........

**(வாய்ஸ்)**

*பத்திரிக்கையாளர் தினம் 2 (16)*

**(வாய்ஸ்)**

தேசிய பத்திரிக்கை தினமான இன்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், உண்மை, வெளிப்படை தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் பணியாற்றி வரும் பத்திரிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார். மேலும், ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக கருதப்படும் பத்திரிக்கைகள் பொறுப்புடன் செயல்படுவதை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், அச்சமற்ற மற்றும் உண்மை அடிப்படையிலான பத்திரிக்கை ஒரு வலுவான ஜனநாயகத்தின் அடித்தளத்தை உருவாக்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். சமூகத்தின் உண்மையான குரலை வெளிப்படுத்துவதிலும், பொது உணர்வுகளை பிரதிபலிப்பதிலும், ஊடகங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது என்றும் கூறியுள்ளார். இந்நாளை ஒட்டி தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஜனநாயக நாட்டில்

பத்திரிக்கையாளர் தினம் 3 (11)

பத்திரிக்கைகள் தான் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் இருக்க செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிக்கையாளர்களின் அர்ப்பணிப்பும் சேவையும் இந்தியா ஒரு வலிமையான மற்றும் வளமான நாடாக வளர்ச்சியடைய துணையாக நிற்கும் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தமது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி அரசு மற்றும் பொதுமக்கள் சார்பாக ஜனநாயகத்தின் 4 ஆவது தூணாக விளங்கும் பத்திரிக்கையாளர்களுக்கு தேசிய பத்திரிக்கையாளர் தின வாழ்த்து தெரிவிப்பதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறியுள்ளார். மத்திய - மாநில அரசின் செயல்பாடுகள், மக்கள் நலத்திட்டங்கள் ஆகியவற்றை நேரடியாக சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதில் அவர்களுடைய பணி பாராட்டுதலுக்கு உரியது என்று தெரிவித்துள்ளார்.

*பீகார்* (10)

பீகாரில் புதிய அரசு அமைப்பதற்கான பணியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அம்மாநில சட்டப்பேரவை தேர்தலில் 202 இடங்களில் வெற்றி பெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி புதிய அரசு அமைப்பது குறித்து, லோக் ஜனசக்தி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு சிராக் பாஸ்வான், இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா தலைவர் திரு சந்தோஷ் சுமன் உள்ளிட்டோர் ஐக்கிய ஜனதா தள தலைவரும், முதலமைச்சருமான திரு நிதிஷ்குமாரை பாட்னாவில் சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதனிடையே, ஐக்கிய ஜனதா தள கட்சியின் புதிய சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் பாட்னாவில் நாளை நடைபெற உள்ளது குறிப்பிடத் தக்கது.

தணிக்கை தினம் (14)

மக்கள் வரிப்பணம் பொறுப்புடன் பயன்படுத்தப்படுவதை தணிக்கைத் துறையினர் உற்று கவனிக்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தணிக்கை தின கொண்டாட்ட நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசிய அவர், தணிக்கை அதிகாரிகள் தங்களது திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தணிக்கையில் நியாயம் மற்றும் உண்மைக்கான அர்ப்பணிப்பு, நிர்வாகத்தின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துகிறது என்று கூறிய அவர், இந்திய தலைமை தணிக்கையாளர் பொதுமக்களின் பாதுகாவலர் என்று குறிப்பிட்டார். 2047-ஆம் ஆண்டு விக்சித் பாரதத்தின் தொலைநோக்கு பார்வையை நோக்கி நாடு நகரும் வேளையில், நிதி ஆளுமை மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை வலுப்படுத்துவதில் சிஏஜி எனும் இந்திய தலைமை தணிக்கையாளர் தொடர்ந்து முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

வானிலை 1 (10)

தென்மேற்கு வங்ககடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு-வடமேற்கு பகுதியில் நகரும் என்றும், இதன் காரணமாக வரும் 19 ஆம் தேதி வரை தமிழ்நாட்டின் ஒரு சில பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, கேரளா, மற்றும் மாகே-வில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து புதுச்சேரி மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைய தலைவரும். மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் கூறுகையில்........

(வாய்ஸ்)

வானிலை 2 (16)

(வாய்ஸ்)

தற்போது நிலவி வரும் வடகிழக்கு பருவ காலத்தின் தொடர்ச்சியாக, இந்திய வானிலை ஆய்வு மையம், 15ம் தேதி வங்காள விரிகுடா கடற்பரப்பின் மீது காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது என்று மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக 16, மற்றும் 17 ஆம் தேதிகளில் கன மற்றும் அதிகன மழை பெய்யக்கூடும் என்றும் காற்றின் வேகம் மணிக்கு 55 கி.மீ வரை வீசக்கூடும் என்பதால், புதுச்சேரி பகுதிக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, பொதுமக்கள் அனைவரும் மிக பாதுகாப்பாகவும், எச்சரிக்கையுடனும் இருக்கும்படியும், தேவை இன்றி வெளியே வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார். மேலும், அரசு அளித்துள்ள வழி காட்டுதல்களை பின்பற்றுவதுடன், வதந்திகளை நம்பாமல், அரசு அளிக்கும் செய்திகளை மட்டுமே பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். பொதுமக்கள் பேரிடர் தொடர்பான தங்களது புகார்களுக்கு இலவச அழைப்பு எண்களான 1077, 1070, 112 அல்லது 94889 81070 என்கிற எண்ணில் தகவல்களை தெரிவிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*வாக்காளர் பட்டியல்* (14)

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் புதுச்சேரியில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்த பணிகள் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கடந்த 4 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்குச் சாவடி நிலைய அலுவலர்கள் மூலம் விண்ணப்ப படிவங்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. தொடர்ந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை நேரடியாக வீடு வீடாக சென்று சேகரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் நேற்று உப்பளம், உருளையன்பேட்டை, நெட்டப்பாக்கம், வில்லியனூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்வது குறித்த வாக்காளர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கும் அவர் விளக்கம் அளித்தார்.

*டிஜிட்டல் கண்காட்சி* (16)

புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் 44 ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில், இந்தியாவின் அரங்கம் நாட்டில் பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய டிஜிட்டல் பொது சேவைகளை வழங்குவதற்கான மாற்றத்தின் பயணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இக்கண்காட்சியில் Digi Locker, UMANG, NIXI, NIELIT, ISM மற்றும் ஆதார் போன்ற மின் ஆளுகை குறித்து விரிவாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், டிஜிட்டல் இந்தியா முயற்சி எவ்வாறு வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கம், மற்றும் டிஜிட்டல் அதிகாரமளிப்பை வளர்க்கிறது என்பதை காட்டுவதாக தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் செயற்கை நுண்ணறிவை உள்ளடக்கிய இந்த அரங்கத்தில், செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத்திற்கான நாட்டின் தொலைநோக்கு பார்வையை முன் வைப்பதாகவும் அமைந்துள்ளது. மேலும், இந்தியா – ஏஐ உச்சி மாநாடு 2026 ன் முன்னோட்டமாகவும் இந்த அரங்கம் திகழ்கிறது. இக்கண்காட்சியின் கருப்பொருள்களான மக்கள், கிரகங்கள் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

விளையாட்டு (8)

டோக்கியோவில் நடைபெற்று வரும் 2025 ஆம் ஆண்டின் காதுகேளாதோர் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் தனுஷ் ஸ்ரீகாந்த், இன்று ஏர் ரைபிள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்று உலக சாதனை படைத்துள்ளார். இப்பிரிவில் முகமது வானியா வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி 30 ரன் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது.